# மலைக் குரல்

30வது இதழ்

திடம் கொள் - திமிறி எழு - தீமை வெல்!

அட்டன் சமூகநல நிறுவன வெளியீடு




## வேள்விகள் செய்வோமா?

கூட்டு ஒப்பந்தம் - சம்பளத்தை
கூட்டி கொடுக்குமா - இல்லை
தொழிலாளர்களை!
காட்டிக் கொடுக்குமா?

நாட்டில் நிலவும்
வறுமையும் கொடுமையும்
மாறிப்போகுமா - இல்லை
மக்களின் வாழ்வு நாறிப்போகுமா?


எரிந்த லயங்கள்
சொந்த வீடுகளாய்
தோற்றம் பெறுமா - இல்லை
எரிந்த சாம்பலில்
மறைந்து போகுமா
எங்களது வாழ்வு?

அதிரடி அரசியல்
புரட்சிப் புயல்களில்
அழிந்து போவோமா - இல்லை
இன்னொரு உலகம்
சாத்தியம் என்று
எழுந்து நிற்போமா?

முழ்கிய படகாய்
ஆழ்பவர் கரங்களில்
முழ்கிப் போவோமா - இல்லை
கேள்விகள் தொடுத்து
தோல்விகள் நீர்த்து
வேள்விகள் செய்வோமா?


- ஆசிரியர் குழு

## எங்கள் வாழ்வு செழிக்க வேண்டும்
## ஏழையின் நிலை உயர வேண்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்..?

மலையகத்தில் தேர்தல் திருவிழா அமோகமாகத் தொடங்கி சுமுகமாக நிறைவடைந்துள்ளது. மரபுரீதியான தலைமைகள் இத்தேர்தலில் மண்ணைக் கவ்வியிருந்தபோதும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று மார்த்தட்டிக் கொள்கின்றனர். ஏமாற்று அரசியலுக்கு மக்கள் வழங்கிய தீர்ப்பிலிருந்தாவது மாற்று அரசியலை முன்னெடுக்கும் சுரணையில்லாதவர்கள் மீண்டும் அதே சாக்கடை அரசியலையே தொடர்கின்றனர்.

மறுபுறம் கூட்டு ஒப்பந்தத்திற்கான காலக்கெடு நிறைவடைகின்றது. வாழ்வா? சாவா? என்ற நிலையில் வருமானத்திற்கான வேறு வழியின்றி பெருந்தோட்டத் தொழிலையே நம்பி தொழிலாளர்களின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கையில், உலகச் சந்தையில் தேயிலைக்கு விலையில்லை என்ற வாதத்தை முன்வைத்து பெருந்தோட்டக் கம்பனிகள் அறிக்கைவிடுகின்றனர். இச்சூழலில் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்கள் சார்பாக முன்வைக்கப் போகின்ற கோரிக்கைகள்தான் என்ன? கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால்: சமரசமா? போராட்டமா? அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்குக் கொடுக்கவுள்ள உத்தரவாதம் என்ன?

நாட்டில் நடக்கின்ற யுத்த சூழ்நிலையால் அப்பாவித் தமிழ் மக்கள் ஈவிரக்கமின்றி கொள்ளப்படுவதுடன், வாழ்வதற்கு வழியின்றி தங்களது இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாய் வாழும் அவலம். இந்த முடிவில்லா யுத்தம் தோட்டத் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கையை நேரடியாகவும் மறைமுகமாகவும் தினந் தோறும் பாதித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

இருந்தும் மக்கள் மாற்றத்தை நோக்கியே சிந்திக்கின்றனர். நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் முடிவானது, மலையகத் தோட்டத் தொழிலாளர்களை காலம் காலமாக ஏமாற்றிய பிற்போக்குத் தலைமைகளை புறக்கணித்திருப்பது இதன் அறிகுறியே. ஆக மலையக மக்கள் மாற்றத்தை நோக்கி சிந்தித்தபோதும் தலைமைகள் பிற்போக்குத்தனமான அரசியலையே தொடர்கிறது என மலைக்குரல் நினைக்கிறது.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

# மத்திய மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மலையகத்தின் மாற்றமா?

-சகா

2009ம் ஆண்டின் மலையகத் தேர்தல் திருவிழா போஸ்டர் வேடிக்கைகளோடு இனிதே நிறைவடைந்து விட்டது. தேர்தல் முடிவுகளின்படி ஐ.தே.க விலிருந்து நுவரெலியா மாவட்டத்தில் 05 தமிழர்களையும், ஐ.ம.சு.மு கூட்டணியிலிருந்து போனஸ் உட்பட நான்கு தமிழ் பிரதிநிதிகளும் தெரிவுசெய்யபட்டுள்ளனர். மலையகத்தில் காலூன்ற எத்தனித்த புதிய அரசியல் முகங்கள் தங்களது பணபலம் என்ன என்பதனை சரியாகவே நிரூபித்துக் கொண்டனர். இவர்களை மலையகத்தின் மாற்றுத் தலைமைகள் எனக் கொள்ள முடியுமா? மலையக மக்கள் மரபு ரீதியான தலைவர்களுக்க ஒரு மரண அடியைக் கொடுத்து விட்டார்கள் என தீர்க்க தரிசிகள் சோதிடம் கூறி வருகின்றனர். உண்மையில் மரபார்ந்த தலைவர்கள் மக்கள் நலன்களைத் தவிர்த்து சுயலாபத்தை நோக்கிச் சென்றதற்கான மரண அடியே தேர்தல் முடிவுகளாகும்.

வெற்றி பெற்றவர்களில் எவருமே கொள்கை வழியிலான அரசியல், மலையக அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. மாறாக வாகனத் தொடரணி, பணபலம், போஸ்டர், கட்டவுட்டுக்கள், எதிரணி மீதிருந்த மக்களின் வெறுப்பை தூண்டி விடல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கவர்ச்சிகரமாக பேசுதலின் ஊடாக மக்கள் மத்தியில் ஒரு மாயாஜாலத்தை ஏற்படுத்திவிட்டார்கள். தொடர்ந்து இவர்கள் அரசியல் நடத்த இவர்களின் தேர்தல் கால செலவுகளை ஒத்த பணவிரயத்தை மேற்கொள்ள நேரிடலாம் இன்றேல் இப்புது முகங்களின் திரைப்படங்கள் தோல்வியையே சந்திக்கும்.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலை பாராளுமன்றத் தேர்தலுக்கான ஒத்திகையாகக் கொண்டால் இதே தொகையான வாக்குகளைப் பெற முடியுமா? எனும் சந்தேகமும் உண்டு. காரணம், வெற்றியடைந்தும் குதிரைப் பந்தயத்தில் முதலாவதாக தனது தம்பி வரவில்லை எனும் ஏக்கத்தில் மலையக மக்கள் சாராயத்துக்கு விலை போய் விட்டனர் என மின்னலில் குமுறிய குமுறல், குறித்த கட்சியின் தொழிற்சங்கத் தலைவர்களையும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளதோடு பல அபிமானிகளையும் இழக்கச் செய்துள்ளது.

மரபு ரீதியான தலைவர்கள் எனக் கூறிக்கொண்டோரில் அண்ணன் ஒரு உறுப்பினரையேனும் மாகாண சபைக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செல்ல முடியவில்லை. தம்பியோ பெறும் சரிவைக் கண்டுவிட்டார். இவர்களின் அரசியல் இருப்பை உறுதிசெய்ய மலையகம் எங்கனும் துரித அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் ஏற்கனவே ஆரம்பித்த சில அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தி வைத்தும், எஞ்சிய 61 ஆசிரிய நியமனங்களை இரத்து செய்தும் மக்களின் கடும் கண்டனங்களுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றனர்.

இதே சூட்டில் மேல் மாகாணத்திலும் வெற்றிலையின் வெற்றிக்காக இவர்கள் உழைக்கின்றமை மக்களை மேலும் எரிச்சலடையச் செய்துள்ளது. “தம்பியின் கட்சி உறுப்பினர்களும் தெரிவாக வேண்டும் என்பதே எனது எதிர்ப்பார்பாகும் ....” என அண்ணன் கூறியிருப்பது எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தம்பியுடன் இணைந்தாவது ஆசானத்தை பெற்றுவிட வேண்டும் எனும் உள்நோக்கத்தில்தான் எனும் கதையும் கூறப்படுகின்றது. ஆக நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் “மாற்றத்திற்க்கு ஏங்கும் மலையக மக்களின் தவிப்பையும் :ஆசனத்தை பரிகொடுத்த தலைவர்களின் தலையிடியையுமே” காட்டுகின்றது.







# மலையகக் குறும்பா கவிஞன் குறிஞ்சித் தென்னவன்

தமிழ் இலக்கியம் பெற்ற புதிய செய்யுள் வடிவங்களில் குறும்பாவும் ஒன்று. குறும்பா வடிவத்தில் ஆங்கிலக் கவிதைகள் பல ஆக்கப்பட்டுள்ளன. இக்கவிவடிவத்தில் சமூக சிந்தனைகளையும், தனிமனித விழுமியங்களையும் கையாண்டு வெற்றி கண்டவர்களில் மகாகவி உருத்திரமூர்த்தி, குறிஞ்சித் தென்னவன் ஆகியோரைக் குறிப்பிடலாம். மலையகத்தில் குறும்பா கவிதையின் முன்னோடி குறிஞ்சித் தென்னவன். இவர் மலையக வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு பாடிய சில குறும்பாக்கள்...



**குப்பன் வாழ் லயத்தினது கூரை!**
**குளமாக்கும் வீட்டை மழைத் தாரை!**
**தப்பாது இங்கு வந்து**
**தகரமெல்லாம் ஓரிரவில்**
**அப்போதே அடையும் கொழும் பூரை!**

**தொழில் சங்கத் தலைவர் தண்டபாணி!**
**தொழிலாளர் இவர்க்கு ஒரு ஏணி**
**விழிசிவக்க, முகஞ்சிவக்க -**
**மேடைகளில் பேசிடுவார் -**
**தலைவர் இவர் இன்று காங்காணி!**

**பாப்பாத்தி தூக்கி வந்தாள் கூடை!**
**பார்த்து நிறை சொல்பவனோ காடை!**
**தீப்பாயும் கண்களினால் -**
**மேய அவள் மேனிதனை -**
**நாப்பாடும் இருபதிது சாடை!**


**மலைகளில் ஊற்றெடுக்கும் தண்ணீர்!**
**மக்கள் விழி ஊற்றெடுக்கும் கண்ணீர்!**
**வளமூட்டி ஒளிகொடுக்கும்**
**மாவலியாய் பாயும் எனில்**
**இலை இவர்க்கு குடிப்பதற்கு தண்ணீர்!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்களின் வாழ்வா சாவா நிலையில் கூட்டு ஒப்பந்தம்

**- A.C.R.ஜோன்**

தொழிலாளர் பிணக்குகளையும், தொழில் உரிமைகளையும் கூட்டு பேரம் பேசுவதன் அடிப்படையில் தொழிற்சங்க பிரதிநிதிகளும் முதலாளிகளும் பேசி தீர்க்கின்ற நடைமுறைகள் உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றன. இதனை சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் சரத்துகளும் சட்டரீதியாக அங்கிகரிக்கின்றது. கூட்டு பேரம் பேசுகின்றபோது தொழிலாளர்களின் நலன்களுக்காக தொடர்ந்து போராடுகின்ற தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தொழிலாளர்களின் உரிமைகள், சலுகைகள், நலன்களுக்காக சட்டரீதியாகவும் ஆதாரபூர்வமாகவும் வாதாடுகின்ற அதே நேரத்தில் தொழிலாளர்களை எவ்வாறெல்லாம் சுரண்டி இலாபத்தை சம்பாதிக்கலாம் என்ற நோக்குடன் தொழில் தருனர்களும், முதலாளிகளும் செயற்படுவர்.



இவ்வாறான பேரம்பேசலில் இருதரப்புக்கும் இடையில் ஏற்படுகின்ற பேச்சுவார்த்தையின் பின் தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக இணக்கபாடுகள் ஏற்படுமாயின் அவை ஒப்பந்தமாக கைசாத்திடப்படும். சில நடைமுறைகளின் பின் அது ஒரு சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்பு ஒப்பந்தத்திற்கான காலப்பகுதியில் ஒப்பந்தத்தை மீற முடியாது. ஆனால் தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்ற கோரிக்கைகள் வென்றெடுக்கபடவில்லையெனின் ஒப்பந்தத்தை கைவிடும் உரிமை தொழிற்சங்கங்களுக்கு உண்டு.

அடிப்படையில் தொழிற்சங்கங்கள் தொழிலாளர் வர்க்க நலன்களுக்காக உழைப்பவர்களாகவும், தொடர்ந்து போராடுபவர்களாகவும் இருக்கின்றபோதுதான் தொழிலாளர்களுக்கு சார்பான கூட்டு ஒப்பந்தங்கள் ஏற்படமுடியும். மாறாக தொழிற்சங்கங்கள் தொழிலாளர் விரோத செயல்களில் ஈடுபடுவதன் மூலம் தங்களது தேவைகளை அடைய முனைவார்களானால் அங்கு தொழிலாளர் உரிமைகள் சுரண்டப்படும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையைப் பொருத்தவரையில் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்படுகின்ற கூட்டு ஒப்பந்தத்தை இலங்கையின் சட்ட விதிகளுக்கு அமைய காணப்படுகின்ற அதனை ஒரு சட்டமாக ஏற்றுக்கொள்ளும் நடைமுறை இருக்கிறது. கூட்டு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்ட பின்பு ஒப்பந்தம் தொழில் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும். தொழில் ஆணையாளரின் ஒப்புதலுடன் வர்த்தமான பத்திரிகையில் இவ்வொப்பந்தம் வெளியிடப்படுமானால் அது ஒரு சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தம் முடிவடையும் காலம் வரை அதனை மீற முடியாது.

இதன் அடிப்படையிலேயே தோட்டத்தொழிலாளர்களின் தொழில் ரீதியான சில உரிமைகளும் சலுகைகளும் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில தீர்மானிக்கப்படுகின்றன. குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் உட்பட மேலும் சில தொழில் உரிமைகள் சலுகைகள் 1992ம் ஆண்டு தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்டதிலிருந்து கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கும் - முதலாளிகளுக்கும் இடையே கைசாத்திடப்படுகின்ற கூட்டு ஒப்பந்தங்களில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாகவே தொழிற்சங்கங்கள் கலந்து கொள்கின்றன. எனவே உண்மையான தொழிற்சங்கங்களின் கடமை தொழிலாளர்களின் வர்க்க நலன்களுக்காக உழைப்பதாகவே இருக்கமுடியும் என்பதை இக்கட்டுரையின் தொடக்கத்திலேயே குறிப்பிடப்பட்டிருந்தோம். ஆனாலும் மலையகத்தில் காணப்படுகின்ற முன்னணி தொழிற்சங்கங்கள் தொழிலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோத செயல்களில் ஈடுபடுவதுடன் முதலாளி வர்க்க நலன்களுக்காக சேரம் போவதினை அனுமதிக்க முடியாது. தொழிலாளர்களின் விருப்பத்தினை அறியாது சம்பிரதாய நிகழ்வாக கூட்டு ஒப்பந்தத்தினை தொடர்ந்து கொண்டிருப்பதனை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? பெருந்தோட்டத் தொழில் துறை தவிர்ந்த ஏனைய சில நிறுவனங்களில் செய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களில் சம்பள நிர்ணய சபையைவிட அதிகமான வேதனத்தினை தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்த சந்தர்ப்பங்களும் இருந்திருக்கின்றன. எனவே கூட்டு ஒப்பந்தத்தில் தொழிற்சங்கங்களின் பேரம் பேசும் சக்தி வலுவாக இருக்குமானால் தொழிலாளர்களின் உரிமைகளை முடியுமானளவு வென்றெடுப்பதற்கான வாய்ப்புகளும் உண்டு.

## கூட்டு ஒப்பந்தம் என்ன சம்பிரதாய நிகழ்வா?

கூட்டு ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கான தீர்வினை ஏற்படுத்துவதே என்பதனை மலைக்குரல் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. ஏனைய உரிமைகள், சலுகைகள் தொடர்பாக இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதும் தொழிலாளர் சம்பளமே இதன் மையக்கருவாகவும் உள்ளது.

மலையக சமூகத்தில் பெரும்பாலான மக்கள் தோட்டத் தொழிலாளர்களாக இருப்பதால் இந்த கூட்டு ஒப்பந்தம் இச்சமூகத்தின் வாழ்வியலையும் இருப்பினையும் தீர்மானிக்கும் ஒப்பந்தமாக இருக்கின்றது. குறிப்பாக ஒரு சமூகத்தின் பொருளாதாரம் வீழ்ச்சியடையுமானால் அது அச்சமூகத்தின் ஒட்டு மொத்த வாழ்க்கையும் அழித்துவிடும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்தவகையில் வருமானத்திற்கான வேறு வழியின்றி உழைப்பையே நம்பி வாழும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை தீர்மானிக்கும் ஒப்பந்தமாக கூட்டு ஒப்பந்தம் இருக்கின்றது.

2006ம் ஆண்டின் இறுதிபகுதியில் சம்பள உயர்விற்காக தோட்டத் தொழிலாளர்கள் நடத்திய தன்னெழுச்சிப் போராட்டம் தோட்டத் தொழிலாளர்களின் வரலாற்றில் பதியப்பட வேண்டிய மிகமுக்கிய நிகழ்வு. தொழிலாளர் விரோத தொழிற்சங்கங்களின் சதிவலையில் வீழ்ந்துவிடாது குறைந்தபட்சம் 300 ரூபா ஒரு நாள் அடிப்படைச் சம்பளம் என்ற கோசத்துடன் தொழிலாளர்கள் பெருந்தோட்டப் பகுதிகள் முழுவதிலும் கிளர்ந்தெழுந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இருந்தும் 170 ரூபாய் அடிப்படை சம்பளம் என்ற உடன்பாட்டின் அடிப்படையில் தொழிலாளர்களின் விருப்பத்துக்கு மாறாக நமது நாட்டு ஜனாதிபதியின் முன்னிலையில் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார்களுக்கும் இடையில் கூட்டு ஒப்பந்தம் மீண்டுமொருமுறை கைச்சாத்திடப்பட்டது. தொழிலாளர்களின் விருப்பத்திற்கிணங்கவே கூட்டு ஒப்பந்தங்கள் செய்யப்படவேண்டும் என்ற நடைமுறை காணப்படுகின்றபோது இதற்கு மாறக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

40 வீதத்திற்கும் அதிகமாக தொழிலாளர்கள் அங்கம் வகிக்கின்ற தொழிற்சங்கங்கள் மாத்திரமே இந்த கூட்டு ஒப்பந்தத்தில் பங்குகொள்ளமுடியும் என்ற நடைமுறை காணப்படுகின்றது. அதன் அடிப்படையிலேயே



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற் சங்க கூட்டமைப்பு ஆகியவையே கடந்தகாலங்களில் நடந்த கூட்டு ஒப்பந்தங்களில் பங்குபற்றின. இந்த மூன்று அமைப்புக்களையும் தவிர்ந்த ஏனையவர்கள் கூட்டு ஒப்பந்தத்தில் பங்குபெற முடியாது அல்லது கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிரான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளது. எனவே இந்த மூன்று தொழிற்சங்கங்களே ஒட்டு மொத்த தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் - ஏனெனில் கூட்டு ஒப்பந்தத்தில் பங்குகொள்ளாத தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்களும் கூட்டு ஒப்பந்த நடைமுறைகளுக்குக் கட்டுப்படவேண்டிய நிலைமையே காணப்படுகின்றது. எனவே தோட்டத் தொழிலாளர்களின் முடியுமானளவு உரிமைகளைக் கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக பெற்று கொடுக்கவேண்டிய தார்மீக பொறுப்பு இவர்களுக்கு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம் கூட்டு ஒப்பந்தத்தில் பங்கு கொள்ளாத தொழிற்சங்கங்கள் பல கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கின்றன. இக்கருத்துக்களில் பெரும்பாலான நியாயங்களும் உண்டு. குறிப்பாக இ.தொ.கா, இலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் அங்கத்துவம் தற்போது சரிந்து வருகின்றதாகவும், தொழிற்சங்க கூட்டமைப்பைப் பொருத்தவரையில் பலமிக்க தொழிற்சங்கங்கள் அதில் அங்கம் வகிக்கவில்லை என்ற கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றது. எனவே எல்லாத் தொழிலாளர்களும் தொடர்ச்சியாக ஒரே தொழிற்சங்கத்திலேயே இருக்கின்றார்கள் என்று கூறமுடியாது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு தொழிலாளரும் தனது தொழிற்சங்க அங்கத்துவத்தை விரும்பினால் வேறு தொழிற்சங்கத்திற்கு மாற்றுவதற்கான உரிமையுண்டு.

இந்த நடைமுறையினைத் தோட்டப்பகுதிகளில் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம். இந்நிலையில் இந்த மூன்று சக்திகள்தான் கூட்டு ஒப்பந்தத்தில் பங்கெடுப்பதற்கு உரித்துடையவர்கள் அல்லது, கூட்டு ஒப்பந்தத்தில் பங்குகொள்ளும் தொழிற்சங்கங்கள், ஒட்டு மொத்த தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர் என்பதில் எந்தளவுக்கு நியாயம் உண்டு? என்பதையும் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

## கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிரான தொழிற்சங்கங்கள்

மறுபுறம் கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க கூடிய கணிசமான தொழிலாளர் அங்கத்துவத்தினை கொண்ட பல தொழிற்சங்கங்கள் வளர்ந்து வருகின்றன. குறிப்பாக மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் ஐக்கிய முன்னணி, தொழிலாளர் விடுதலை முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் போன்ற இன்னும் பல தொழிற்சங்கங்களை குறிப்பிடலாம்.

கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தொழிற்சங்கங்கள் இந்த ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதற்கும், இக்குறைபாடுகளுக்கு எதிரான பிரசாரங்கள், சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் முன்வரவேண்டும். குறிப்பாகக் கூட்டு ஒப்பந்தத்தினை எதிர்க்கின்ற தொழிற்சங்கங்கள் தங்களுக்குள் ஐக்கியத்தினை ஏற்படுத்தவேண்டிய தேவையிருக்கின்றது. முடியுமானல் தங்களது தொழிலாளர் சக்தியினைப் பயன்படுத்தி கூட்டு ஒப்பந்தினை தடுப்பதற்கு நீதி மன்றத்தில் தடுப்பாணை வாங்கலாம் அல்லது கூட்டு ஒப்பந்தத்தில் நான்காவது சக்தியாக பங்கு கொள்வதன் மூலம் தொழிலாளர் நலன் சார்ந்த கூட்டு ஒப்பந்ததை ஏற்படுத்த முயற்சிக்களாம். பல்வேறு சக்திகளும் இதற்கு எதிரான அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலமாகவே கூட்டு ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நீக்கமுடியும் அல்லது ஒரு மாற்று நடைமுறையினை பின்பற்ற முடியும்.

## மத்திய மாகாண சபைத் தேர்தல் முடிவுகளும் கூட்டு ஒப்பந்ததுக்கு எதிரானதே

தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.காவின் செல்வாக்கு அரைவாசிக்கும் மேல் குறைந்திருக்கின்றது, ஐக்கிய தேசிய கட்சியின் தொழிற்சங்கமாகிய இலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் எவரும் வெற்றிபெறவில்லை. மாறாக கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சில தொழிற்சங்களின் பிரதிநிதிகள் வெற்றி பெற்றிருக்கின்றனர். குறிப்பாக தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் ஐக்கிய முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி போன்றவற்றின் வெற்றியைக் கூறாலாம்.

குறிப்பாக தொழிலாளர்களின் போராட்டத்தை முடக்கி இறுதியாக செய்யப்பட்ட தொழிலாளர் விரோத கூட்டு ஒப்பந்தின் தாக்கமும், பழைய தொழிற்சங்கங்கள் மக்களால் புறக்கணிக்கப்பட்டு புதிய சக்திகளின் பிரவேசத்திற்கும் ஒரு காரணமாக அமைகின்றது. எதிர்வரும் மேல் மாகாண, ஊவா மாகாண தேர்தல்களிலும் இதுமாதிரியான தீர்ப்பினை மக்கள் வழங்குவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

## உதிரி தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள்.

கூட்டு ஒப்பந்தத்தினை சிறு சிறு தொழிற்சங்கங்களாக இருந்து எதிர்ப்பது தொழிற்சங்கங்களின் சக்தியையும் தொழிலாளர் உரிமைகளையும் மேலும் வலுவிழக்கச் செய்வதாகவே அமையும். இன்றைய சூழ்நிலையில் தொழிலாளர்களை உதிரித் தன்மையாக்குவதில் தோட்டக் கம்பனிகளும், இனவாத அரசாங்கமும் திட்டமிட்டு செயற்படுகின்றன. எனவே தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒரே நோக்கிலான தொழிற்சங்கங்களின் சக்தியினை ஒருங்கிணைப்பது காலத்தின் தேவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம் கடந்த சில ஆண்டுகளாகவே தொழிற்சங்களில் அங்கத்துவம் குறைவடைந்து வருகின்றது. குறிப்பாக 42 வீதமான தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிப்பதில்லை என்று ஆய்வுகள் கூறுகின்றன. இது ஒரு ஆரோக்கிமான நிலை என்று நாங்கள் கூற முற்படவில்லை.

தோட்டக் கம்பனிகளும் தொழிற்சங்கங்களை பலவீனப்படுத்துவதில் இன்று வெற்றி கண்டுள்ளன. எனவே தொழிற்சங்கங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுடன், தொழில் உரிமைகள் தொடர்பான கல்வியினை தொழிலாளர்கள் மத்தியில் ஏற்படுத்துவது தொழிற்சங்கங்களின் கடமையும் பொறுப்புமாகும்.


பெருந்தோட்டத் தொழிற்துறையில் தொழிற்சங்கங்களில் அங்கம்வகிக்கின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கு ஒரு அடிப்படைக் காரணம் சில தொழிற்சங்கங்களின் அராஜக நடவடிக்கைகள் மற்றும் தொழிலாளர் விரோத செயற்பாடுகளுமேயாகும்.. மேலும் பல சந்தர்ப்பங்களில் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் தொழில் பிணக்குகள் தொடர்பான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையும் தொழிற்சங்கங்கள் மீது தொழிலாளர்களுக்கு அதிருப்தி ஏற்படுவதற்கு மற்றொரு காரணியாக அமைகிறது.

தொழிலாளர் விரோத தொழிற்சங்கங்களை விமர்சிப்பதனால் தொழிற்சங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கக்கூடிய, உழைக்கும் மக்களின் வர்க்க குணாம்சங்களை உள்வாங்கிய மாற்றுத் தொழிற்சங்கங்கள் உருவாக்கப்படவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் தொழில் கௌரவத்தை மதிக்கும் வண்ணம் வாழ்க்கை செலவுகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் நியாயமான சம்பளம் வழங்கப்படுவது உட்பட ஏனைய சலுகைகள் கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக உறுதி செய்யப்படவேண்டும் அல்லது கூட்டு ஒப்பந்தம் புறக்கணிக்கப்பட்டு சட்ட அடிப்படையில் தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**வாழ்க்கைச் சுமை அழுத்தும் இந்த நேரத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது தொழிற்சங்கங்களின் கடமையல்லவா?**

## குறுக்கெழுத்துப் போட்டி - 6



### இடமிருந்து வலம்

01. வாழ்ந்து மறைந்த மலையக தொழிற் சங்கவாதிகளில் ஒருவர் - ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் தாபகர்

03. மலையகத்தில் உள்ள தொழில் தெய்வங்களில் ஒன்று. தேயிலை தொழிற்சாலை தொழிலாளர்கள் வணங்குவது

06. தமிழர்களின் பாதுகாப்புக்குத் தேவையான மிக முக்கிய ஆவனமாக கொள்ளப்படுவது (குழம்பியுள்ளது)

07. ஒரு நூல் அல்லது பத்திரிகை, அச்சிக்கு செல்வதற்கு முன்பு தயாரிக்கப்படுவதை இப்படி அழைப்பர்

08. ஒவ்வொருவருக்கும், ஒவ்வொன்றுக்கும் அல்லது தலைக்கு என்று பொருள்படும்

10. இலங்கையில் உள்ள தமிழ் பத்திரிகைகளில் ஒன்று (மாறியுள்ளது)

11. அவசியமற்ற பிரச்சினை என்றும் சொல்லாம் (மாறியுள்ளது)

14. சூடான காலநிலையுடன் தொடர்புடைய நோய்களில் ஒன்று

15. தெரிந்ததை வைத்து தெரியாததை காண்பதைக் கூறலாம்

16. சபை என்றும் கூறலாம்

18. ஒரு வகை ஊர்வன நமது மக்களால் நம்பிக்கையுடனும் பார்க்கப்படுவது.

19. தொழிலாளி என்று கூறலாம் (மாறியுள்ளது)

### மேல் இருந்து கீழ்

01. மலையக மக்களின் தலைநகர் என்று சொல்லலாம்

02.மறைதல் என்று சொல்லாம் (குழம்பியுள்ள)

04.இடையூரு என்று சொல்லாம்

05.தேவர்களின் உணவு (குழம்பியுள்ளது)

09. புராணக் கதையை ஆதாரமாக கொண்டு இருவர் விவாதம் செய்வது போல் பாடலை பாடி நிகழ்த்தும் கலை நிகழ்ச்சி

11.இதுவரை இல்லாதது அல்லது வழக்கமானதிலிருந்து மாறுபட்டது.

12. ஆரம்ப காலத்தில் வேலைத் தளங்களில் மழையில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்வதற்கு தோட்டத் தொழிலாளர்கள் இதனை பயன்படுத்தினர்.

13. தற்காலத்தில் முக்கிய கம்யூனிஸிய நாடு

17. பொம்மை என்று சொல்லலாம் (மாறியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி 06க்கான விடைகளை 25.04.2009க்கு முன் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். முதல் பரிசு பெறும் அதிஷ்ட்டசாலிக்கு 500/= பெறுமதியான புத்தப்பொதியொன்று வழங்கப்படும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக வரலாற்றில் சில நிகழ்வுகள்....

-குறிஞ்சிக் குமாரன்

| திகதி | ஜனவரி |
|---|---|
| 03 | 1986ம் ஆண்டு தொண்டமான் தலைமையில் குடியுரிமைப்பிரச்சினைக்காக மலையகத் தமிழர்கள் நடத்திய சத்தியாகிரக போராட்டம் |
| 07. | 1953 ஆண்டு 30,000 தோட்டத் தொழிலாளர்களுக்கு மேல் பங்கு கொண்ட மாபெரும் கூலி உயர்வுப் போராட்டம் |
| 10 | முல்லோயா கோவிந்தனின் நினைவு நாள் |
| 14 | நடேசய்யர் பிறந்த நாள் |
| 16 | 1945. நேரு – கொத்தலாவலை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. |
| 19. | 1940ம் ஆண்டு நடேசய்யரால் தொடங்கப்பட்ட இலங்கை – இந்தியத் தொழிலாளர் சம்மேளனம் தொழிற் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 22 | 1986ம் ஆண்டு தலவாக்கலை நகரில் மலையகத் தமிழர்களுக்கு எதிரான பேரினவாதிகளின் தாக்குதலை எதிர்த்துப் போராட்டம். |
| 29. | 1947ம் ஆண்டு இந்திரா – சிறிமா ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. |

| திகதி | பெப்ரவரி |
|---|---|
| 01 | 1988ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்விற்கான ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம். |
| 04 | திரு. பெரிய சுந்தரம் நினைவு நாள் |
| 08 | தோழர் N. சண்முகதாசன் நினைவு நாள் |
| 11 | திரு. கே. இராஜலிங்கம் நினைவு நாள் |
| 18 | நாடற்றவர்கள் என்றுக் கருதப்பட்ட மலையகத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு 1986ம்ஆண்டு 5ம் இலக்கச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவு பெற்றது. |

| திகதி | மார்ச் |
|---|---|
| 03 | டெவன் தோட்டத் தொழிலாளி வைத்தியலிங்கத்தின் தியாக நாள் |
| 30 | கொட்டியாகல தோட்ட தொழிலாளர்களான ஐயாவு, பிரான்சிஸ் தியாக நாள் |
| 31 | திருசெந்தூரனின் நினைவு நாள் |

| திகதி | ஏப்ரல் |
|---|---|
| 01 | 1989ம் ஆண்டு சம்பளம் உயர்வு கோரி மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டம் |
| 02 | 1984 ஆண்டு சம்பள உயர்வுக்கான வேலை நிறுத்தப் போராட்டம் |
| 04 | 1937ம் ஆண்டு நடேசய்யர் தலைமையில் அட்டன் நகரில் மாநாடு |
| 16 | 1939ம் ஆண்டு கொட்டியாக்கலை தோட்டத் தொழிலாளர் போராட்டம் |
| 28 | 1957ம் ஆண்டு மலையக தமிழர்களின் குடியுரிமைக்காக இலங்கை இந்திய காங்கிரஸ் நடத்திய போராட்டம். |
| 30 | திரு. அப்துல் அசிஸ்சின் நினைவு நாள் |

| திகதி | மே |
|---|---|
| 01. | தொழிலாளர் தினம் |
| 04 | மலையகத் தமிழரான திரு. பெரிய சுந்தரம் அவர்கள் தொழில் அமைச்சராக நியமனம் பெற்றது. |
| 11 | தோழர் சிவனுலட்சுமணன் தியாக நாள் |
| 12 | 1982ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான போராட்டம் |
| 17 | 1977ம் ஆண்டு புஸ்ஸல்லாவ டெல்டா தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் லயம் பேரினவாதிகளால் தீயிடப்பட்டது. |
| 18 | டயகம தோட்டத் தொழிலாளி ஆபிரகாம் சிங்கவின் தியாக நாள்<br>1947ம் ஆண்டு தோட்டத் தொழிலாளி என்றபத்திரிகையை நடேசய்யர் தொடங்கினார். |
| 19 | ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கமாக அங்கிகரிக்கப்பட்டது.<br>தோழர் ஏ.வு. தர்மலிங்கத்தின் நினைவு நாள் |
| 28 | 1946ம் ஆண்டு மாத்தளை கந்தநுவர தோட்டத் தொழிலாளர் போராட்டத்தில் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டது. |

| திகதி | ஜூன் |
|---|---|
| 06 | 1979ம் ஆண்டு மலையக தொண்டர் ஆசிரியர்களின் அரசாங்க நியமனம் கோரி அட்டன் நகரில் நடந்த சத்தியாகிரகப் போராட்டம். |
| 18. | 1992 ஆண்டு பெருந்தோட்டங்கள் 22 கம்பனிகளுக்கு தனியார் மயமாக்கப்பட்டது. |
| 25. | 1940 ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் இந்திய காங்கிரஸின் தொழிற்சங்கப் பிரிவு பதிவு செய்யப்பட்டது. |

| திகதி | ஜூலை |
|---|---|
| 09. | திரு. இரா. சிவலிங்கத்தின் நினைவு நாள் |
| 13 | 1966ம் ஆண்டு 17.50 பஞ்சம் படி போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது |
| 14 | தியாகிகள் கொம்பாண்டி பொன்னய்யா நினைவு நாள். |
| 18 | 1931ம் ஆண்டு திரு. எஸ். பி. வைத்தியலிங்கம் இந்திய தமிழர்களின் சார்பாக தலவாக்கலைத் தொகுதியில் இருந்த சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். |
| 21 | 1977ம் ஆண்டு தொண்டமான் மலையகத் தமிழர்களின் சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி |
| 25 | 1939ம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் தொடங்கப்பட்டது. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | ஆகஸ்ட் நிகழ்வு |
|---|---|
| 01 | 1939ம் ஆண்டு இந்தியாவில் இருந்து இலங்கை வரும் தொழிலாளர்கள் தடை செய்யப்பட்டனர். |
| 05 | 1947ம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய வதிவிடச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. |
| 08 | 1968ம் ஆண்டு அந்தோனி என்ற தோட்ட தொழிலாளியின் நினைவு நாள் |
| 12 | 1931ம் ஆண்டு விலைவாசி உயர்விற்கெதிராக தொழிலாளர் போராட்டம் |
| 18 | 1981ம் ஆண்டு மலையகத் தொழிற்சங்கங்கள் இணைந்து நடாத்திய தோட்டத் தொழிலாளர் போராட்டம் |
| 20 | 1984ம் ஆண்டு 18ம் இல பிரஜா உரிமை சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. |
| 26 | 1992ம் ஆண்டு தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டமையை எதிர்த்து நடந்த தொழிலாளர் போராட்டம்<br>1989ம் ஆண்டு மலையக மக்கள் முன்னணி தொடங்கப்பட்டது. |
| 30 | திரு. S. தொண்டமான் நினைவு நாள் |

| திகதி | செப்டெம்பர் |
|---|---|
| 04 | கீனாக்கலை தோட்டத் தொழிலாளர்களான அழகர்சாமி, இராமையா தியாக நாள் |
| 07 | 1947ம் ஆண்டு தேர்தலில் இந்திய வம்சாவளியினர் சார்பாக 08 பேர் பாராளுமன்றம் சென்றனர். |

| திகதி | ஒக்டோபர் |
|---|---|
| 30 | சிறிமா சாஸ்திரிய ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது. |

| திகதி | நவம்பர் |
|---|---|
| 01 | தோழர் ஏ.மு. வெள்ளையனின் நினைவு நாள் |
| 07. | தோழர் நடேசய்யரின் நினைவு நாள் |
| 08 | கினாப்போக்கு தோட்ட தொழிலாளி சோனாய்யின் நினைவு நாள் |
| 11. | 1988ஆம் ஆண்டு 39இல் நாடற்றவர் பிரச்சினைக்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. |
| 18 | தோழர் சி.வி. வேலுப்பிள்ளையின் நினைவு நாள் |

| திகதி | டிசம்பர் |
|---|---|
| 08. | 1952 ஆண்டு நடேசய்யர் சட்ட சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். |
| 14. | 1973ம் ஆண்டு தோட்டத்தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கோரி பெருந்தோட்ட துரை அமைச்சர் கொள்வின் R. D. சில்வாவுடன் பேச்சுவார்த்தை |
| 15 | சர்வதேச தேயிலைத்தினம் |
| 30 | கருங்காலி தோட்டத் தொழிலாளிகளான ஆறுமுகம் ராமசாமி பார்வதி கந்தையா ஆகியோரின் தியாக நாள் |

# குறுக்கெழுத்து போட்டி 05 முடிவுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | ட | க் | 2 க | 3 த் | 4 தி | யா | 5 ன் |
| று | | 6 த | ள | ப | தி | | வ |
| 7 மை | 8 தா | ன | ம் | | | 9 து | ற |
| | லா | | | 10 கை | று | மா | ற் |
| 11 கா | ட் | 12 ட | ம் | | | ள | ட |
| 13 ம | டு | வ | ம் | | 14 ர | ம் | வீ |
| ன் | | 15 க் | கை | கா | ணி | | |
| | 16 ரு | கு | | 17 மு | ல் | லோ | யா |

முதலாம் பரிசு
S. துஷ்யந்தன்
சென். கிளயார் தோட்டம்
தலவாக்கலை

பாராட்டு பெறுவோர்
செல்வி இராஜேந்திரன் வித்தியாஜினி
ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி
பத்தனை

செல்வி ஐ. வினோலியா
டன்பார் தோட்டம்
அட்டன்


மலைக்குரல்
திடம்கொள் - திமிரி எழு - தீமை வெல்
30வது இதழ்

நிறுவனர்
அருட்பணி. S. மரிய அந்தோனி, யே.ச

ஆசிரியர் - வெளியிடுபவர்
பெனி, யே.ச.

இணை ஆசிரியர்
ஏ.சி.ஆர்.ஜோன்
செ. கிருஷ்ணகுமார்

ஆசிரியர் குழு
ஏ.மரிய சூசை
டே. ஜாக்குலின் ராணி

வடிவமைப்பு
டே. ஜாக்குலின் ராணி

இடம் கருதி குறுங்கதைகள், கட்டுரைகள் கடிதங்களை சுருக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு, படைப்புக்களுக்கு பொறுப்பு படைத்தவர்கள். இங்குள்ள ஆக்கங்கள் கலந்துரையாடப்படலாம்

உங்களது ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி


The Editor
"Malaikural"
30,Station Road,Hatton
Tel:051 2223384
Fax:051 2223384
E-mail:censocou@sltnet.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் வியாபாரி

-R. எலிசபெத்

எமது சிறுகதை

தம்பி ரவி எழும்புடா நா வேலைக்கு போவனும்'' தாயின் குரலைக் கேட்ட ரவி ''என்னம்மா இன்னைக்கும் நான் ஸ்கூலுக்கு போக ஏழாதா? அங்கு போனாலாவது எனக்கு பிள்ளைகள் குடுக்கும் சாப்பாடாவது கிடைக்கும், இங்கு அதுவுமில்ல, குட்டி பாப்பாவோட வெளையாடவும் ஏழாது தூக்கிக்கிட்டே திரியனும்'' என்று பத்து வயது நிரம்பிய ரவி புலம்புவது அப்பா ராமையாவின் இருமல் ஒலியுடன் சங்கமமாகிறது.

ஏழு மாத குட்டிப் பாப்பாவுக்கும் ரவிக்கும் இடையில் ஒரு பத்மாவதி. அவள் ஏற்கெனவே எழும்பி வெறும் கருப்பட்டி துண்டுடன் தேனீர் குடித்துக் கொண்டு அடுப்படியில் அமர்ந்திருக்கிறாள். கணவனுக்கும் தேனீர் கருப்பட்டித் துண்டு கொடுத்த மனைவி வேலாயி அவசர அவசரமாக ரொட்டி தட்டுகிறாள். ஒரு மாதிரி அவளின் வேலைகள் முடிவடைகின்றன. ஆனால் ராமையாவின் சிந்தனைகள் 3 வருடங்களுக்கு முன் நடந்த சம்பவத்தை அசைபோடுகின்றது.

''ராமையா! இந்த வெட்டு சரிப்பட்டு வராது ஒழுங்கா வெட்டு இப்படி வெட்டினால் வீட்டுக்குத்தான் போகவேண்டி வரும்'' என்ற கணக்கப்பிள்ளையின் குரலைக் கேட்டு ஆத்திரமடைந்தான், கவ்வாத்து வெட்டும் ராமையா. அப்போது குறி தவறி காலைப்பதம் பார்க்கின்றது, கவ்வாத்துக் கத்தி. பின் 3 மாதங்கள் ஆஸ்பத்திரி...இன்று ஊன்று கோலுடன் திரியும் நிலை. 'ஏன் நம் குடும்பத்தை இப்படி சோதிக்கின்றான் கடவுள்? ராமையாவால் யாரை நொந்துக்கொள்ள முடியும்? சிந்தனை கலைகின்றது. மனைவியின் குரல் கேட்டு பிள்ளையின் குரல் மேலும் சத்தமாக ஒலிக்கின்றது. ''தம்பி ரவி ரொட்டி வச்சியிருக்கேன் நீயும் தின்னுட்டு அப்பாவுக்கும் எடுத்துக்குடு பாப்பா அழுகும் போது சின்னத்துண்டு ரொட்டி வச்சிருந்து குடுத்துட்டு பானையில மல்லித்தண்ணியிருக்குது அதையும் போத்தலுல ஊத்தி குடுத்துடு ஏய் பத்மா நீ ஓடு புள்ளக்காம்புராவுக்கு தாயின் கட்டளை நிறைவேறுகின்றது. நான் போயிட்டு வாறோங்க'' கணவனிடம் விடைபெறுகின்றாள் வேலாயி.

ஓட்டமும் நடையுமாக சென்ற வேலாயி கொலனியிலுள்ள ஒரு பெரிய வீட்டினுள் நுழைகின்றாள். ''ஏன் இவ்வளவு லேட்?'' எஜமானியின் கடும் கேள்வியால் திடுக்கிட்ட வேலாயி சமாளிக்கின்றாள் ''சின்னவள் சரியான கரச்சல் அம்மா ஒரே அழுகை....'' ''சரி சரி பேபிக்கு போய் பால் குடு'' எஜமானியின் சொத்து வீணாகிவிடும் என்ற காரணத்தினால் தத்து எடுத்து வளர்க்கும் 3 மாத குழந்தைக்கு காசுக்காகத் தனது மகள் குடித்து வளரவேண்டிய தாய்ப்பாலை பேபி குடித்து மகிழ்கின்றது. வேலாயின் கண்களில் கண்ணீர் வடிகின்றது. ''கெதியா ஓடி விடாம வீட்டு வேலை முடிஞ்சதும் 3மணிக்கு ஒருக்கா பால் குடுத்துட்டுப் போ'' என எஜமானி கட்டளை பிறப்பித்தாள்.

பொழுது சாயும் வேளை, எஜமானி கொடுத்த மீதிச் சாப்பாட்டுடனும் தாய்ப்பாலுக்கு கிடைத்த 200 ரூபாவுடன் வீடு நோக்கி ஓடுகின்றாள் வேலாயி.



தாயின் வருகைக்காகக் காத்திருந்த வீட்டார் பணக்கார வீட்டில் மீதியான சாப்பாட்டை சுவைக்கின்றார்கள். குட்டிப்பாப்பாவைத் தூக்கி பால் கொடுக்கும் தாயின் முலையை சப்பிப்பார்த்தும் பால் இல்லாததால் குழந்தை அழுகிறது. அதற்குச் செய்துவிட்ட துரோகத்தினால் அதன் முகத்தை பார்க்க முடியாத வேலாயி மேலே அண்ணாந்து முகட்டு வானைப் பார்க்கிறாள். அங்கு ஓட்டை தகரங்களுக்கிடையில் தெரியும் நட்சத்திரங்கள் மௌனமாய் அழுகின்றன.

தனது கண்களில் வடியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட வேலாயி கணவனைப் பார்த்து ''இந்தாங்க 200ரூபா, நாளைக்குப் போய் மருந்து வாங்கிட்டு வாங்க... நான் காலையில வெல்லனா பால் குடுக்கப் போய்டுவேன்...'' என கூறிக் கொண்டே படுக்கையை சரி செய்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினமும் மலையகப் பெண்களும்

-செ. கிருஷ்ணா

சர்வதேச மகளிர் தினமானது உலகம் முழுவதும் மார்ச் 08ம் திகதி கொண்டாடப்படுகின்றது. ஐ.நா வின் உறுப்பு நாடுகள் மகளிர் தினத்தை தேசிய விடுமுறை நாளாக அறிவித்துள்ளனர். தேச எல்லைகளைக் கடந்து இன, மத, மொழி, கலாசார, பொருளாதார, அரசியல் வேறுபாடுகளைக் களைந்தெறிந்து சமத்துவம், நீதி, சமாதானத்துடன் கூடிய ஒரு புதிய பண்பாட்டைப் படைப்பதே மகளிர் தினத்தின் அடிப்படை தாற்பரியமாகும்.

இப் புதிய பண்பாட்டைப் படைப்பதில் மரபு ரீதியான எல்லைக் கோடுகள் பெண்களை ஒரு வரையறைக்குள் சிறைபடுத்தியுள்ளமை முட்டுகட்டையாக இருக்கின்றது. இதனைத் தகாத்தெறிய 1792ம் ஆண்டு மேரி வெலன்ஸ்டன் எழுதிய Vindication of the rights of Women எனும் நூலின் ஊடாகக் குரல் எழுப்பினார். அன்றிலிருந்து உலகில் பெண்ணிய சிந்தனைகள் தோன்றி வரலாற்றில் வளர்ச்சி அடைந்து இன்று தனக்கென ஒரு கோட்பாடு, அமைப்பு ரீதியான பின்புலம், நடைமுறைச் செயற்பாடுகள் என்பவற்றோடு பின்னிப் பிணைந்து உலகில் வேறூன்றி உள்ளது.



பெண்ணிய சிந்தனையின் அடிப்படைக் கொள்கை "ஆணுக்கு பெண் சரி நிகர்" என உலகுக்கு எடுத்துரைப்பது ஆகும். காலப்போக்கில் பெண்ணிய கருத்தானது தீவிர பெண்ணிய வாதத்தினால் ஆண்களுக்கு எதிராக: ஆண்களுக்கு மேலாக பெண்களின் நிலை உணர்த்தப்படல் வேண்டும் என செயற்படத் தொடங்கிய நிலை ஆண்களின் மனதில் ஒரு உளவியல் சிக்கலை ஏற்படுத்தியது. இருந்தபோதும் பெண்ணியத்தின் கோட்பாடுகள் இன்று ஒழுங்கு முறையான கட்டமைப்பைப் பெற்றுள்ளதோடு புதிய பண்பாட்டைப் படைப்பதில் பெண்களின் "அதிகாரம்" எனும் சிந்தனை அரசியலூடாக வளர்த்தெடுக்கப்பட்டு அதிலிருந்து சமூக மாற்றத்திற்கான அறைகூவல் விடப்படுகின்றது. அதன் ஒரு வெளிபாடு சர்வதேச மகளிர் தினமாகும். ஒவ்வொரு வருடமும் உலகம் முழுவதிலும் உள்ள பெண்ணிய அமைப்புகள், நிறுவனங்கள் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடி வருகின்றன. இதில் இலங்கையும் உள்ளடங்கும். உழைக்கும் பெண்களின் நிலை குறித்த மகளிர் தினப் பார்வை என்ன: அதிலும் மலையகப் பெண்கள் குறித்த சிந்தனை என்ன என்பது எம்முன்னுள்ள வினாக்களாகும். உலக அரங்கில் கூடுதலாக உழைத்து குறைவான கூலி பெறுவதில் எமது தோட்டத் தொழிலாளர்கள் முதன்மை பெறுகின்றனர். இதிலும் குறிப்பாக மலையகப் பெண்களின் நிலை படு மோசமானதாகவும், வாழ்நாள் முழுவதும் தேயிலைத் தோட்டத்து அட்டைக்கடியிலும், கொழுத்தும் வெய்யிலிலும் தம் வாழ்வினைத் தொலைத்து விட்ட நிலையில் அவர்களின் உரிமைக்கான குரல் எங்கிருந்து ஒலிக்க வேண்டும் எனும் வினா எழுகின்றது.

மலையக மகளிரைப் பொருத்தவரை தோட்டத் தொழிலாளிகளாகவும், ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களாகவும், ஆசிரியர்களாகவும், சில அலுவலக உத்தியோகத்தர்களாகவும், கடமை புரிகின்றனர். இவ்வனைவருக்கும் பிரச்சினைகள் பல்வேறுப்பட்டதாக இருப்பினும் அடிப்படையில் பெண்கள் குறித்த பிரச்சினையாக இருப்பது உண்மை. இதில் தடைகள், வேலைத்தளத்தில் பிரச்சினை, பாலியல் தொந்தரவுகள், இல்லத்து வன்முறை, கலாசார ஒரங்கட்டல் என்பன முக்கியமானவை. இவற்றுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் மற்றும் பெண்ணிய அமைப்பகள் செயற்பாட்டிலிருந்த போதும் பெண்கள் மீதான கட்டுபாடுகள் மட்டும் குறைந்தபாடில்லை.

ஏன் இந்த நிலை என சிந்திபோமானால் மலையகத்தில் பெண்ணிய அமைப்புகள் இன்னும் சரிவர நிறுவனமயப்படுத்தப்படவில்லை. அமைப்பு ரீதியாக பெண்களை உள்ளடக்கியதான தூர பார்வை கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள் இல்லை எனும் குறைகளை அறியலாம். மகளிர் தினக் கொண்டாட்டங்களும், மகளிர் தினத்தில் மட்டும் போராட்டங்கள் செய்வதன் ஊடாக மட்டும் பெண்ணிய சிந்தனையின் மாற்றத்துக்குரிய பண்பாட்டைப் படைக்க முடியாது. மாறாக அன்றாடம் செயற்படும் வகையில் பெண்களை ஒரு வலையமைப்பாக்கி அர்பணிப்புடன் செயல்படுத்த வேண்டும்.

பெண்களின் துறை ரீதியான அறிவைக் கொண்டு பெண்களை வளர்த்தெடுப்பதோடு நிறுவனங்கள், விளையாட்டு, அரசியல், தீர்மானமெடுத்தல் எனும் துறைகளில் ஊடறுப்பு செய்து பெண்களுக்கான வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வது அவர்கள் முன்னுள்ள பிரதான சவாலாகும். இதனை தகர்த்தெரிவதன் ஊடாகவே பெண் தலைமைத்துவத்திலான புதிய பண்பாட்டினை உருவாக்கலாம். ஆகவே இப்பெரும் பொறுப்பு பெண்ணிய அமைப்புகளைச் சார்ந்துள்ளது. இதற்கான திட்டங்களை சரிவர வகுப்பதோடு சகல மட்டங்களிலும் உள்ள பெண்களை ஒன்று திரட்டுவதும், பெண்ணியத்தின் வேர்களை விதைப்பதும் மலையகத்தின் மாற்றத்திற்கு முதற்படியாக இருக்கும் என்பதில் சிறிதொரு ஐயமும் இல்லை.

மலையகத்தின் உழைக்கும் பெண்கள் எனும் போது தோட்டத் தெரிலாளர்களே முதன்மைப்படுத்தப்பட வேண்டும். மலையகப் பெண் தோட்டத் தொழிலாளர்கள் ஒப்பீட்டளவில் கூடிய வருமானம் பெற்ற போதும் குடும்பத் திட்டமிடல், தீர்மானம் எடுத்தல் என்பவற்றில் புறந்தள்ளப்பட்டே வருகின்றனர். ஆகவே குடும்பத்தின் உற்பத்திக் கருவியாகவும், வீட்டு வேலைகளுடனும் ஓரங்கட்டப்படும் பெண்களின் நிலை உயர்த்தப்படுவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். மலையகத்தில் உழைக்கும் பெண்களின் வேலை நேரம் குறித்து பாரிய சிக்கல் தன்மை காணப்படுகின்றது. உழைக்கும் நேரத்தினை எட்டு மணித்தியாலங்களிலிருந்து 6 மணித்தியாலங்களாகக் குறைக்கப்படல் வேண்டும் எனும் கோசம் இவ்வருட மகளிர் தின நிகழ்வில் வலுவாக முன்வைக்கப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாது தொழிற்சங்கங்கள் ஊடாகவும், அரசியல் ஊடாகவும் முன்னெடுப்பதற்கான ஆக்க பூர்வமாண செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாள பெண்கள் கங்காணிகள் மற்றும் மேற்பார்வையாளர்கள் (Supervisor) என்போர் பிரிட்டிஷர் காலம் தொடக்கம் ஆண்களாகவே இருந்து வருகின்றனர். அண்மைக்காலங்களாக இந்நிலை சற்று மேற்பார்வையாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதனை நன்றாகப் பயன்படுத்திப் பெண்களுக்கான மேற்பார்வையாளர்களை வேலைக்கமர்த்துவதற்கு தொழில்சங்கங்களுக்கூடாக பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டிய கட்டாயமும் பெண்ணிய அமைப்புகளைச் சார்ந்துள்ளது.

ஆண்டாண்டு காலமாக பெருந்தோட்டத்துறை கொழுந்தெடுக்கும் பெண்களின் ஆடை குறித்து பல்வேறு முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. பாரம் தூக்கும் உடலின் பாகம் தோற்பட்டயாகும். இதனைவிடுத்து தலையில் கயிற்றால் இருக்கம் நிலை மூளைப்பாதிப்புகளை உருவாக்கும் எனும் கருத்து நிலவுகின்றது. அதே போல் அட்டை கடி, குழவி கொட்டுதல், இரத்த காயம் என்பன ஏற்படும் பட்சத்தில் முதலுதவி செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகள் என்ன? இதற்கான மாற்று வழிகள்தான் என்ன? என தீர்க்கமாக சிந்தித்தும், கள ஆய்வுகளை மேற்கொண்டும் பெண்ணிய அமைப்புகள் தொழிற்சங்க ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அழுத்தத்தைக் கொடுப்பதும் அவசியம். இதற்கான போராட்டத்தில் மலையக மகளிரை ஓரணிக்கு கொண்டு வருவது பெண்ணிய அமைப்புகளின் முதலாவது சவாலாகும். இதனை உருவாக்க பெருந்தோட்டப் பெண்ணிய அமைப்புகள் தமக்குள் ஒரு ஐக்கிய அமைப்பினை உருவாக்கி கொள்வதனூடாக மலையகத்தில் மாற்றத்திற்குரிய பண்பாட்டினை உருவாக்கலாம்.

**மாற்றம்....**

கொடி கம்பங்கள் இன்னும்
தோட்டத்து வரவேற்பாளர்கள்!
நிறங்கள்...
ஒன்று, இரண்டு
மூன்றென பல்கிப்பெருகும்
தோட்டத்துக் கொடி கம்பங்கள்!

கலர்கள் மாறியாது
கொடிகளில்
எங்கள் வாழ்க்கை மாறுவதோ
சில நொடிகளில்!
இளைஞனே
உன் புரட்சிகளின் நொடிகளில்

-சகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மலையக மக்கள் உழைக்கவும் சாகவும் பிறந்தவர்கள்!

"மலையக மக்கள் உழைக்கவும், சாகவும் பிறந்தவர்கள்". களுத்துறைத்தோட்டப் பகுதியில் உள்ள ஒரு தொழிலாளியின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ள வாசகம் இது. பல தசாப்தங்களைக் கடந்த பின்பும் மேற்படி தொழலாளியின் கல்லறை வாசகம் இன்றும் நிதர்சனமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நாட்டுக்காக உழைத்து உருக்குழைந்து, தோட்டத்துக்கே உரமாகிப் போன மேற்படித் தொழிலாளியின் கல்லறை வாசகத்தை மறுத்துரைக்க எவருக்கும் திராணி இருக்காது.

அந்தளவுக்கு மேற்படி கல்லறை வாசகத்தை மலையக மக்களின் வரலாற்றில் அழுத்தி எழுதப்பட்ட வாசகமாக உள்ளது.

,ந்த நாட்டின் பேரினவாதச் சிந்தனையின் நொறுக்குத் தீனியாக மலையக மக்களே உள்ளனர்.



அரசியல் அந்தஸ்த்துக்காக ஜனநாயக பாரம்பரிய நாடாளுமன்ற சபைக்குள் தம்மையும் நுழைத்துக் கொள்ள கால் நூற்றாண்டுக்கு மேலாக நடத்தி வந்த போராட்டமஇ அதன் ஊடாகப் பெற்ற ஏழு பிரதிநிதித்துவங்கள் அனைத்தும் டி. எஸ். சேனாநாயக்க தலைமையிலான அணியினரின் பிரஜா உரிமைச்சட்டம் என்ற பேராயுதத்துக்கு முன் சுக்குநூறாகியது. மலையக மக்களின் அரசியல் கனவு பிரஜாவுரிமை சட்டத்துடன் கலைந்து போனது. இதனால் அரசியல் அநாதை என்ற அந்தஸ்த்தே மிஞ்சியது.

இதிருலிருந்து மலையக மக்கள் மீண்டு எழ 1977 ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டியிருந்தது. மறைந்த இ.தொ.கா தலைவர் சௌமிய மூர்த்தித் தொண்டமானின் நாடாளுமன்ற பிரவேசத்துடன் ஆரம்பித்த மலையகத்துக்கான நாடாளுமன்ற பிரவேசம் இன்று பத்தாக உருவெடுத்துள்ளது.

இப்பிரதிநிதித்துவம் பிரதேச சபைகள், மகாண சபைகள், மாநகர சபைகள் என விரிவடைந்தது. இந்த விரிவாக்கத்தால் மேற்படி சபைகளுக்கும் நாடாளுமன்றத்திற்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய காரணகர்த்தாவாக இருந்த மக்கள், பயன் பெற்றார்களோ இல்லையோ சபைகளுக்குப் பிரதிநிதிகளாக சென்றவர்களும், மலையக அரசியல், தொழிற்சங்கத் தலைமைக்ளும் பெரிதளவில் நன்மை பெற்றனர் என்பது மறுப்பதற்கில்லை. குறிப்பாக மலையகத்தின் பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கை மற்றும் வாக்கு வங்கியினையும் வைத்து நிகழ்த்தப்பட்ட பேரம் பேச்சுக்களால் மலையகத் தலைமைகளும் அவர்களுடன் இணைந்துள்ள சுற்றமும் சூழ நிற்போரும் பலன் அள்ளிக் குவித்துகொண்டனர்.

பல வேளைகளில் மலையகத்தின் பிரதிநிதித்துவங்கள் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் விளங்குகின்றது. இருந்தபோதும் மலையக மக்கள் தமது அபிவிருத்திக்கான உரிமையை இழந்த நிலையில், ஒடுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் அரச கட்டமைப்பில் நாடாளுமன்றத்துக்கு அடுத்ததாக மாகாண சபைகளும் உள்ளூராட்சி சபைகளுமே உள்ளன. மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் சமூக, கலாசார மேம்பாடு போன்ற விடயங்கள் இங்கு முக்கிய பங்கு வகிக்கின்றன.

1989ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 15ம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டம் கிராம சபைகளின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே கொண்டுவரப்பட்டது.

இந்த இரு சபைகளும் வாக்களித்த மக்களுக்கு எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் முன்னெடுக்கும் நிலையில் இல்லை. மலையக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் கையாலாகாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிலைலேயே இதுவரை செயற்பட்டு வருவதனை காண முடிகின்றது.

மொத்தத்தில் 'உழைக்கவும் சாகவும் பிறந்ததாகக்' கூறப்பட்ட மலையக மக்கள், அரசியல் அநாதை என்ற நிலையிலிருந்து மீள முடியாதத் துயரில் இன்று வெறுமனே தேர்தல் காலங்களில் வாக்களிக்கும் இயந்திரங்களாகவும். பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் ஜடங்களாகவுமே உள்ளனர் என்பதே பொறுத்தமாகும்.

ஆனால் இது மாற்றப்படக் கூடியது. இது பற்றி உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய பொறுப்பு மலையகத் தலைமைகளுக்கு உண்டு. தோட்டங்கள்தான் தனியாரிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவே அன்றி தோட்ட நிலங்களோ, மக்களோ அல்ல. தோட்ட நிலங்கள் இன்றும் அரசுடமையாகவே உள்ளன. அந்த வகையில் தோட்டப்புறங்களின் அபிவிருத்தியை மாகாண சபை மற்றும் பிரதேச சபை முறைமைகளின் கீழ் கொண்டு வர முடியும். இதனை மலையகத் தலைமைகளின் ஒன்றிணைந்த செயற்பாடுகளினூடாகவே அடைந்து கொள்ளலாம். மலையக மக்கள் தமது உரிமைக்கான பயணத்தை இன்னும் முழுமையாகத் தொடங்கவில்லை என்பதனை நாமும் எம் தலைமைகளும் உணர வேண்டும். அதற்கேற்ற செயற்பாடுகளும் முன்கெடுக்கப்பட வேண்டும்.

# CSC புது யுகம் நோக்கிய பயணத்தில்...

அட்டன் சமூக நல நிறுவமானது மலையக சமூகத்தின் முன்னேற்றத்துக்காகக் கடந்த இரண்டு தசாப்தங்களாக சேவையாற்றி வருகின்றது. இதன் பணி நோக்குப் பயணத்தில் கல்வி மேம்பாடு, மனித உரிமைக்கல்வி, பால் நிலை சமத்துவம், ஆய்வுகளும் வெளியீடுகளும், கொள்கை மாற்றம் நோக்கிய பரப்புரை என்பவற்றினை முதன்மைப்படுத்தி மாணவர்கள், ஆசிரியர்கள், சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், தோட்டத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என்போரை இணைத்துச் செயற்படுகின்றது. அந்த வகையில் இவர்களை மையப்படுத்தி மலையக மக்களின் வரலாற்றுத் தேடல், தலைமைத்துவம், ஆளுமைவிருத்தி ,உலகமயமாக்கல் சமூகத்தில் மலையகம், உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு, ஊடகக் கல்வி போன்ற செயலமர்வுகளை முன்னெடுத்துச் செல்கின்றது.



**நிகழ்வுகளின் நொடிகளில்...**



**2009ம் ஆண்டு நடைபெற்ற பணித்துறைப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்கள்**



**2009ம் ஆண்டு நடைபெற்ற மகளிர் தினப் புரட்சிப் பேரணி அட்டன் சமூக நல நிறுவனத்தின் முன்னால் ஆரம்பமாகின்றது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிசத்தைச் சொன்னால்....

உழைப்புக்கேத்த கூலி கெடைக்கல
கொத்மலை திட்டத்தையும் தடுக்கல
கட்சி அரசியலோ பேச்சு அளவுல
நீதி கெட்ட சமுதாயமோ தெருவுல
உண்மைய உலகம் அறியல
சுயநல பித்தர்கள் கொறயல
விடுதலை எமக்கு கெடக்கல
வாக்குப் போட்டு வாழ்க்க வெளுக்கல....

தமிழனென்று சொல்ல முடியல...
தலை நிமிர்ந்து நடக்க முடியல....
பைப்ப தொறந்தா தண்ணியில்ல....
தட்டிக்கேக்க நாதியில்ல.....

நம்ம ரத்தத்தை உறிஞ்ச
அட்டையும் கொறையில......
குடும்ப கட்டுபாடும் குறையல.....
ஏமாறுபவர்களும் கொறையல.....
ஏமாற்றுபவர்களும் கொறையல......
மடையனிக்கும் சினிமா
நிகழ்ச்சிகளும் குறையல......

பொருட்களுக்கு விலையும் கொறையல....
எங்கள் லயம் இன்னும் மாறல...
"மே"யிலே மேடைப்பேச்சு கொறையல......
சொல்லுற பொய்களும் கொறையல....
நம் பரம்பரை ஆயுளும் பெருகல....
நம் சமூகம் உயர கல்வியும், பெருகல.....

சிறுவர் தொழிலாளர்கள் கொறையல.....
மந்த போசனை கொறையவேயில்ல....
தலைமைத்துவம் இன்னும் வளரல.....
போதைக்கு இன்னும் மவுசு கொறையல....
நோய்கள் இன்னும் கொறையல......
அடிமைத்தனம் இன்னும் ஒழியல.....


அ. ஜெயபிரசாத்
நோர்வூட் த.ம.வி
நோர்வூட்

## நிமிர்ந்து நில்

தோட்டத் தொழிலாளர் சம்பள
உயர்வு
தோட்டங்கள் தோறும் வேலை
நிறுத்தம்
இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு
யுவதிகளுக்கு தாதியர் பயிற்சி
ஐயோ!
சொல்லி முடிக்க வாங்குது மூச்சி
எத்தனை குட்டுகள் உன் முதுகில்
இத்தனைப் பெற்றும் முடிவில்லா
பேச்சி
இதெல்லாம் யார் செய்கின்ற
சூழ்ச்சி
சற்று நிமிர்ந்து பார்

தன்மானம் காக்க தனி வழி நடக்க
தருமத்தின் வழியில் ஒரு
தலைவனை தேர்ந்தெடு
இனவாத இருள் நீக்கி
தர்மம் தலை தூக்கி
செழிப்பான மலையகம் மலர
மலையகமே! மலையகமே!
சற்றே நிமிர்ந்து நில்

மலரும் கலைஞன்
பெ. ஞானகுமார்
லபுக்கல



## தந்திரம் செய்வோம்

தோழா
தந்திரம் செய்வோம்
தரித்திரம் அழிப்போம்
கூட்டு ஒப்பந்தம் எனும்
காட்டிக் கொடுப்பை நாம்
கூட்டாக எதிர்போம்.
குண்டர் கூட்ட
அரசியலை
மூட்டையிலே கட்டி வைத்து
கொழுந்து கூடைக்குப்
பிறந்த ஒரு
காளயர் கூட்டமது எம்
மலையகத்தை ஆட்சி செய்ய
தந்திரம் செய்வோம்
தரித்திரம் அழிப்போம் - தோழா
சரித்திரம் படைப்போம்

## இனியாவது...

நெட்டு லயமதிலே
நூறாண்டு கடந்து விட்டோம்
கொட்டும் மழையினிலே
தொப்பையாக நனைந்து விட்டோம்
ஆடிக் குளிர் காற்றினிலே
தகரம் எல்லாம் பறி கொடுத்தோம்
வயர் சோட் ஆனதிலே
லயத்தை எல்லாம் கருக்கி விட்டோம்
போதுமைய்யா லயத்து வாழ்க்கை
போர் கொடி தூக்கியிங்கு
புது மனைகள் படைத்திடவே
புயல் காற்றாய் புறப்படுவோம்

## பெண்ணிய புரட்சியாளர்

பெண்களுக்கு விழா எடுத்தார் இங்கு!
போராட்டத்தில் எடுத்துக் கொண்டார் பங்கு!
விழா எடுத்த 'புரட்சியாளர்' -
வீட்டை பூட்டி வைத்து -
மனைவிக்கு ஊதினார் ஐயோ சங்கு

-சகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரைத் தெரியுமா?



A. ரொபர்ட் டேனியல்

இணையம், மின்னஞ்சல் என தொடர்பாடல் தொழிநுட்பம் இன்று பரந்துவிட்ட சூழ்நிலையில் கடிதத் தொடர்பாடல் தனது முக்கியத்துவத்தை இழந்துவிடவில்லை. கடிதத்தின் அஞ்சல் கூறு முத்திரை. முத்திரை சேகரிப்பைப் பொழுதுபோக்காகக் கொண்டவர்தான் ஏ. ரொபர்ட் டேனியல் எனும் நம்மவராவார். இவர் நோர்வூட், போட்ரி தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கண்டி கட்டுகஸ்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் 30க்கும் மேற்பட்ட நாடுகளின் பத்தாயிரத்துக்கும் அதிகமான முத்திரைகளைச் சேகரித்து வைத்திருக்கின்றார். தான் ஓய்வு பெற்றுவிட்ட போதும் முத்திரை சேகரிப்பு எனும் பொழுது போக்கு தன்னை இன்னும் இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கச் செய்வதாகக் கூறுகிறார்.

உலகில் உள்ள அபூர்வமான கிடைத்தற்கரிய முத்திரைகளை வைத்திருக்கும் இவர் முத்திரைகள் குறித்த ஆழ்ந்த அறிவையும் கொண்டுள்ளார். முத்திரையின் வரலாறு, முத்திரையின் வகைகள், முத்திரைகளின் அமைப்பு மற்றும் முத்திரையின் முக்கியத்துவம் தொடர்பில் அவரின் அறிவு பரந்துபட்டது. பழுதடையாத முத்திரைகளே சேகரிக்க உகந்தது. பழுதடைந்த முத்திரைகளைக் கொண்டு புதிய கலைப்படைப்பினையும் செய்திருக்கிறார், டேனியல். போத்தல்களுக்குள் சிரமப்பட்டு முத்திரைகளை ஒட்டி அதனைக் கலையம்சம் பொருந்திய காட்சிப் பொருளாக்குகிறார். முத்திரை சேகரிப்பு தேடலுக்கான பசியைத் தூண்டிவிடுவதோடு உற்சாகம், நேர்த்தி, நுணுக்கம் என்பவற்றை கற்றுத் தருவதாக கூறும் இவர், இன்றைய மாணவர்களை முத்திரை சேகரிப்பில் அதிக அக்கறை கொள்ளச் செய்வது அவர்களின் சுயவிருத்திக்கு பங்காற்றும் என்கிறார். முத்திரையால் தனக்கு விலாசம் தேடிக் கொண்டவர் எமது ஏ. ரொபர்ட் டேனியல். இவரின் முயற்சியை விடா முயற்சியாக்கி சாதனைகள் பல செய்ய வேண்டும் என்பதோடு டேனியல், முத்திரையும் - முத்திரை சேகரிப்பும் தொடர்பிலான ஒரு ஆக்க முயற்சியையும் வெளிகொணர வேண்டும் என்பது எமது அவவாகும்.

# ஏனிந்த அவலம்?

பெருந்தோட்டப்பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாகத் தொடரும் அவலம் லயங்கள் தீக்கிரையாகின்றமையாகும். இந்த வருடத்தில் லயத் தீப்பிடிப்புத் தொடரில் நான்காவது சம்பவம் பொகவந்தலாவை மேற்பிரிவில் நடந்ததுள்ளது. இதற்கான காரணமாக மின் ஒழுக்கே காட்டப்படுகின்றது. பெருந்தோட்டக் குடியிருப்புக்களை மாற்றியமைக்கும் திட்டங்கள் காலம் காலமாகத் தலைவர்களினால் பேசப்படுகின்றனவே தவிர அவை ஒரு தொடர்ச்சியானத் திட்டமாகக் கைகொள்ளப்படுவதில்லை. பெருமளவிலான தோட்டங்கள் லயன் காம்பிராக்களையே இன்றும் கொண்டுள்ளன. இவை என்றுதான் மாற்றமடையும்? அரசாங்கத்துடன் இருக்கும் அமைச்சர்கள் இதர பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனைப் பார்த்து முதலைக் கண்ணீர் வடிக்காது: பாராளுமன்றத்தில் பேசாததற்கான காரணம் என்ன? எரிந்த லயன் குடியிருப்புகளை மீண்டும் துரிதமாக நிர்மாணிக்க கம்பனிகளுக்கு தொழிற்சங்கங்கள் அழுத்தம் கொடுக்காமல் இருப்பது ஏன்? பொகவந்தலாவ சம்பவத்தை பொறுத்த வரை இதுவரை அனைத்து அரசியல் பிரமுகர்களும் வந்து ஆதங்கப்பட்டும் பாதிப்படைந்தோருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறியும் சென்றுள்ளனர். இதுவே தேர்தல் காலமாக இருந்தால் உடனடியாக வீடு கட்டும் பணி ஆரம்பமாயிருக்கும்! நகர்ப்புறமாக இருந்திருந்தால் சில கோடிகள் வர்த்தக சங்கத்திற்கு உதவித் தொகையாக வழங்கப் பட்டிருக்கும். "எரியும் லயங்களில் பிடுங்கிய ஓட்டு வரை இலாபம்:" என்ற நிலையை மாற்றி தோட்டத் தொழிலாளர்களுக்கான தனிவீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் முன் வர வேண்டியது காலத்தின் கட்டாயமல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org